[1995 ஏப்ரல் 21

(ஆ) வைகையாற்றிலிருந்து பிரியும் நிலையூர் கால்வாய் விரிவாக்கம் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திரு எஸ். ஆண்டித்தேவர் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார். திரு. எஸ். ஆண்டித் தேவர்.

திரு. எஸ். ஆண்டித் தேவர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மாவட்டம், வைகையாற்றிலிருந்து பிரியும் நிலையூர் கால்வாய் விரிவாக்கம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களின கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

மதுரை மாவட்டம் வைகையாற்றிலிருந்து பிரியும் நிலையூர் கால்வாய் விரிவாக்கத்திற்கான மதிப்பீடு (ரூ. 936 லட்சம்) பொதுப்பணித்துறையை சார்ந்த திட்டம் மற்றும் ஆய்வு பிரிவு தள அலுவலர்களால் தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் வளையன் குளம் மற்றும் கம்பிக்குடி தொடர் கண்மாய்களின் (Tanks) கீழ் உள்ள 52 கண்மாய்களின் (Tanks) பாசன பரப்புகளை இணைப்பதேயாகும். இத்திட்டத்தினால் பயன்பெறப்போகும் பரப்பளவு 6490.29 ஏக்கர் (பதிவுபெற்றவை). இத்திட்டத்திற்கான மதிப்பீடு தள அலுவலர்களிடமிருந்து பெறப்பட்டு கூர்ந்தாய்வு செய்யப்பட்டவுடன் தலைமைப் பொறியாளர் திட்டம் மற்றும் ஆய்வு அவர்களால் அரசின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்படும்.

திரு. எஸ். ஆண்டித் தேவர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலையூர் கால்வாயிலிருந்து விரிவாக்கத் திட்டம் கோரி மதுரை மாவட்டத்தைச் சார்ந்த 23 பாசனக் கண்மாய்களைச் சார்ந்த கிராமப் பொது மக்களும், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்தைச் சார்ந்த 13 பாசனக் கண்மாய்களைச் சார்ந்த கிராமப்

1995 ஏப்ரல் 21] [திரு. எஸ். ஆண்டித் தேவர்]

பொது மக்களும், காமராஜர் மாவட்டத்தை சார்ந்த 19 பாசனம் கண்மாய்களைச் சார்ந்த கிராமப் பொது மக்களும், 1950-ஆம் ஆண்டிலிருந்து அரசுக்கும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும் கோரிக்கையை கொடுத்து வந்தார்கள். 1976-ஆம் ஆண்டில், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், இந்தப் பகுதியைப் பார்வையிட்டு ஆய்வு செய்து திட்டமிட்டு மதிப்பீடு செய்து அரசுக்கு அனுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

1981 ஆம் ஆண்டு பொதுப்பணித்துறை 17 கோடி ரூபாய்க்கு மதிப்பீடு தயார் செய்து அரசுக்கு அனுப்பியது. 1991 ஆம் ஆண்டு நிலவரப்படி மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. 1993 ஆம் ஆண்டு நில நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்கள் எழுதிய கடிதத்தில் மேற்படி திட்டம் பொருளாதார ரீதியில் அதாவது பி.சி. ரேஷியோ அடிப்படையில் சிக்கனமற்றது என்று சொல்லி இந்தத் திட்டத்தைச் செயலுக்கு ஏற்க மறுத்து மறுபரிசீலனை செய்வதற்காகத் திருப்பி அனுப்பிவிட்டார்கள். இப்போது மாண்புமிகு அமைச்சர் கொடுத்த அறிக்கையின்படி மதுரை வைகையாற்றிலிருந்து பிரியும் நிலையூர் கால்வாய் விரிவாக்கத் திட்டத்திற்குரிய மதிப்பீட்டினை 9 கோடியே 36 இலட்சம் ரூபாய் அளவுக்குத் தயார் செய்து தல அதிகாரிகளிடம் இருக்கிறது என்றும் அதைத் தலைமைப் பொறியாளர் மூலமாக அரசு அங்கீகாரத்திற்கு அனுப்பினால் அங்கீகரித்து அனுப்புவார்கள் என்றும் சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பகுதி மக்கள் மிகவும் தாழத்தப்பட்ட, அழுத்தப்பட்ட கிராமத்தைச் சேர்ந்தவர்கள். நீண்டகாலமாக இக்கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். இப்போது பி.சி. ரேஷியோ சரியாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தலைமைப்பொறியாளருக்கு ஆணையிட்டு உடனடியாக அந்த அறிக்கையைப் பெற்று அரசின் அனுமதியைக் கொடுக்க ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-25

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வைகை ஆற்றிலிருந்து பிரியும் நிலையூர் கால்வாய் விரிவாக்கத் திட்டத்திற்காக ஏறத்தாழ 9 கோடியே 36 இலட்சம் ரூபாயில் பொதுப்பணித் துறை சார்பில் திட்டம் மற்றும் வடிவமைப்புப் பிரிவில் மதிப்பீடு உருவாக்கப்பட்டு இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாக வலையங்குடி மற்றும் கும்பிக்குடி கால்வாய்களின் கீழே இருக்கின்ற 52 கண்மாய்களுக்கு பாசனப் பரப்பு செய்வதற்கான ஒரு ஏற்பாடு

செய்யப்பட்டு இருக்கிறது. அந்த வகையில் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தினால் பயன்பெறும் பகுதிகள் 6490 ஏக்கர். இந்த நிலங்கள் எல்லாம் பதிவு பெற்ற நிலங்கள். இந்த திட்டத்தின் மதிப்பீடு ஏற்கனவே தல அதிகாரிகளால் பரிசீலனை செய்யப்பட்டு ப்ளானிங் அன்ட் டிசைன்ஸ் தலைமைப் பொறியாளர் மூலம் அரசுக்கு அனுப்பப்பட்டு இருக்கிறது. ஏற்கனவே இதற்கு நிதியாதாரம் இல்லாத காரணத்தால் இந்தத் திட்டத்தை உடனடியாக அரசு எடுத்துச் செய்ய முடியவில்லை என்ற சூழ்நிலை இருந்தது. ஆனால் இப்போது நீர் வள ஆதாரங்கள் தொகுப்புத் திட்டத்தின் கீழ் அதாவது 'வாட்டர் ரிசோர்ஸஸ் கன்சாலிடேஷன் ப்ராஜக்ட் என்று சொல்லப்படுகிற டபுள்யூ.ஆர்.சி.பி. திட்டத்தின்கீழ் இந்த விஸ்தரிப்புப் பணிகளை எடுத்துக்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆகவே டபிள்யூ.ஆர்.சி.பி. திட்டம் வருகிற போது இந்த 9 கோடியே 36 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் உள்ள இந்தத் திட்டம் நிச்சயமாக எடுத்துக்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

திரு. எஸ். ஆண்டித் தேவர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டபிள்யூ.ஆர்.சி.பி. ஒப்புதலுக்குப் பிறகு இந்தத் திட்டம் எடுத்துக்கொள்ளப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நன்றி. இருந்தாலும் இன்னொரு உண்மையை நான் சொல்ல விரும்புகிறேன். இதே வைகை ஆற்றிலிருந்து மதுரை மாவட்டத்தில் பாய்கிற பல கண்மாய்கள் இருக்கின்றன. குறிப்பாக உள்ளாவரம் கண்மாய் 20000 ஏக்கருக்கு பாசனம் தரும் கண்மாயாக இருந்தது. அந்தப் பாசனப் பகுதி அத்தனையும் கட்டடம் ஆகி அந்தக் கண்மாய் ஹவுஸிங் போர்ட்டுக்கு ஒப்படைக்கப்பட்டு வீடு கட்டப்பட்டுவிட்டது. அதேபோன்று வில்லாவரம் கண்மாய் இப்போது கோர்ட் இருக்கிற இடம். கார்ப்பரேஷன் இருக்கிற இடம் எல்லாம் பாசனப் பகுதிகமாக இருந்தவைதான். அதாவது அண்ணாநகர், கே.கே. நகர் போனற இந்தப் பகுதிகளில் எல்லாம் கட்டடம் ஆகிவிட்ட காரணத்தால், மீனாட்சிபுரம் கண்மாய் ஹவுசிங் போர்ட்டுக்கும் இரயில்வே ஸ்டேஷனுக்கும் ஒப்படைக்கப்பட்டுவிட்ட காரணத்தால் வைகை ஆற்றிலிருந்து பாசனம் பெறற 20000 ஏக்கரில் இப்போது பாசனம் இல்லை. எனவே அந்த உபரி நீரையாவது இங்கே கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

1995 ஏப்ரல் 21]

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக பாசன நீராதாரத்தை நாம் பயன்படுத்துகிற போது ஏற்கனவே இருக்கிற ஒரிஜனல் ஆயக்கட்டு என்று சொல்லப்படுகிற பதிவு பெற்ற நிலங்களுக்குத்தான் தண்ணீர் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். இதுபோன்று எக்ஸ்டென்ஷன் செய்கிறபோது இருக்கிற நீர்வரத்து, நீர் இருப்பு ஆகியவற்றைப் பொறுத்து, அங்கே இருக்கிற ஆயக்கட்டுகளை மனதில் கொண்டுதான் அங்கே வருகிற பாசன விஸ்தரிப்பைக் கணக்கிட முடியும். ஆகவே, அதுபோன்ற கண்மாய்கள் ஏற்கெனவே கட்டிடங்களாக வந்துவிட்ட காரணத்தாலே, பொதுமக்களுடைய உபயோகத்திற்கு வந்துவிட்ட காரணத்தாலே, பாசனப் பகுதிகளையுடைய நிலங்களில் பாசனம் இல்லாமல் இருக்கிறது. ஆகவே, அரசு இதைப் பரிசீலிக்கலாம் என்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இந்தத் திட்டத்தை நிறைவேற்றுகின்றபோது ஏற்கெனவே வருகின்ற பாசனப்பரப்பு, கொள்ளளவு, நீர் இருப்பு இவைகளைக் கணக்கிலே எடுத்து அதற்குரிய அதிகாரிகளோடு கலந்து பேசி அரசு முறையான நடவடிக்கை எடுக்கும். அப்படி தண்ணீர் அதிகமாக இருக்கின்ற பட்சத்திலே அதுபோன்ற பாசனப் பகுதிகளுக்கு நிச்சயமாக இந்த அரசு வழங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் *11–30*

4. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திரு. கே. செல்வராஜ், பொதுக் கணக்குக் குழுத் தலைவர்.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுக் கணக்குக் குழுவின் *170*வது மற்றும் *171*வது ஆகிய இரண்டு அறிக்கைகளை, குழுவின் சார்பாக இந்தப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திருமதி ஜீனத் சர்புதீன், பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவர்.